بسم الله الرحمن الرحیم          نحمدہ ونصلی علی رسولہ الکریم          وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللَّهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 10

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

09 ரஜப் 1441 ஹிஜ்ரி கமரி 05 அமான் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
05 மார்ச் 2020

**அல்லாஹ்வின் கட்டளை**

إِنَّ الَّذِينَ اشْتَرَوُا الْكُفْرَ بِالْإِيمَانِ لَنْ يَضُرُّوا اللَّهَ شَيْئًا وَلَهُمْ عَذَابٌ أَلِيمٌ ○

நம்பிக்கையை விற்றுவிட்டு நிராகரிப்பை பெற்றுக் கொண்டவர்களால், நிச்சயமாக அல்லாஹ்வுக்கு ஒருபோதும் எத்தீங்கும் இழைத்துவிட இயலாது. அவர்களுக்கு வேதனையளிக்கக்கூடிய ஆக்கினையுண்டு. (3:178)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நாம் துஆ செய்கிறோம் எனில் இறைவன் வழங்குகிறான். இயற்கை சட்டத்தின் தொடர்பு எப்போதும் துஆவுடன் இருப்பதை ஆழ்ந்து சிந்தித்தால் தெரிந்து கொள்ள முடியும். இறைவனுடன் துஆவின் தொடர்பு நமக்கு உள்ளது. இன்று சில மக்கள் இதனை பித்அத்தாக கருதுகிறார்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

## ரஹ்மானிய்யத் மற்றும் ரஹீமிய்யத்

கருணை இரு வகையில் உள்ளது இது நினைவில் இருக்கவேண்டும். ஒன்று ரஹ்மானிய்யத் மற்றொன்று ரஹீமிய்யத் என்ற பெயரில் அறியப்படுகிறது. ரஹ்மானிய்யத் என்பது எவ்வாறான அருள்கள் என்றால் அது நமது படைப்பு மற்றும் இருப்புக்கு முன்னரே ஆரம்பமாகிவிட்டது. உதாரணமாக, இறைவன் முதன்முதலில் தனது பழமையான ஞானத்தால் பார்த்து இந்த வகை பூமி, வானம், மேலும் புவி மற்றும் விண் பொருட்களை படைத்துள்ளான் அது நமக்கு பலன் தரதக்கதும், பலன் தருபவையாகவும் உள்ளது.

மேலும் இந்த அனைத்து பொருட்களில் இருந்து பொதுவாக மனிதனே பலன் பெறுகிறான். மனிதனுக்கு பலனுள்ளவைகளான செம்மறி, வெள்ளாடுகள் மற்றும் பிற விலங்கினங்கள், அவை என்ன பலனை பெறுகின்றன? உடல் ரீதியாக மனிதன் சுவையான மற்றும் உயர்தர உணவு வகைகளை உண்ணுகிறான் என்பதை பாருங்கள். மனிதனுக்காக உயர்தர இறைச்சி உள்ளது. மிச்சங்கள் மற்றும் எலும்புகள் நாய்களுக்கு. உடல் ரீதியாக எந்த இன்பங்கள் மற்றும் சுவைகள் மனிதனுக்கு கிடைக்கப் பெறுகிறதோ அதில் விலங்குகளும் இணைந்துள்ளது. ஆயினும் மனிதனுக்கு அந்த உயர்தரம் கிடைக்கப்பெறுகிறது.

மேலும் ஆன்மீக இன்பத்தில் விலங்குகள் இணைவதில்லை. ஆகவே இந்த இரு வகை அருள்கள் உள்ளன. ஒன்று நமது இருப்புக்கு முன் அந்நேரத்திற்கு முன்னேற்பாடு என்ற வடிவத்தில் பயன்தரும் பொருட்கள் போன்றவை படைக்கப்பட்டுள்ளது அவை நமது வேலையில் ஈடுபட்டுள்ளது மேலும் இவை நமது இருப்பு , விருப்பம், மற்றும் துஆவிற்கு முன்பே உள்ளவையாகும். அவை ரஹ்மானிய்யத்தின் எதிர்பார்ப்பால் படைக்கப்பட்டது ஆகும்.

மேலும் இரண்டாவது அருள் ரஹீமிய்யத் ஆகும். அதாவது நாம் துஆ செய்கிறோம் எனில் இறைவன் வழங்குகிறான். இயற்கை சட்டத்தின் தொடர்பு எப்போதும் துஆவுடன் இருப்பதை ஆழ்ந்து சிந்தித்தால் தெரிந்து கொள்ள முடியும். இறைவனுடன் துஆவின் தொடர்பு நமக்கு உள்ளது. இன்று சில மக்கள் இதனை பித்அத்தாக கருதுகிறார்கள். நான் இதனையும் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

ஒரு குழந்தை பசியால் துடித்து பாலுக்காக அழுகிறான்,கதறுகிறான் எனில் தாயின் மார்பில் பால் துரிதப்படுகிறது. குழந்தை துஆவின் பெயரும் அறியாதவனாக இருக்கிறான் ஆனால் அவனின் கதறல் பாலை எவ்வாறு ஈர்த்துக்கொண்டு வர முடிகிறது?

இதன் அனுபவம் ஒவ்வொருவருக்கும் இருக்கும். சில நேரங்களில் தாய்மார்கள் பால் வருவதை உணர்வதும் இல்லை என்பதை பார்க்க முடிகிறது. ஆனால் குழந்தையின் அழுகை பாலை ஈர்த்து வருகிறது. இவ்வாறெனில் நமது கதறல் இறை சன்னிதானத்தில் இருக்கும்போது அது எதனையும் ஈர்த்து கொண்டு வராதா என்ன? கொண்டுவரும். மேலும் அனைத்தையும் கொண்டுவரும்.

ஆனால் அறிஞர்கள் மற்றும் தத்துவாதிகளாக அமர்ந்திருக்கும் கண் குருடர்கள் அதனை பார்க்க முடியாது. குழந்தைக்கு தாயுடன் எவ்வித தொடர்பு உள்ளதோ அந்த தொடர்பு மற்றும் உறவை மனிதன் தனது சிந்தையில் வைத்து துஆவின் தத்துவத்தை ஆழ்ந்து சிந்தித்தால் மிக சுலபமாக எளிதாக அதனை புரிந்து கொள்ளலாம்.

இரண்டாவது வகை கருணை தரும் போதனையாவது, ஒரு கருணை கேட்டதற்கு பிறகு உருவாகிறது. கேட்டுக்கொண்டே செல்லுங்கள் கிடைத்துகொண்ட இருக்கும் உத்ஊனீ அஸ்தஜிப் லகும் (அல் முஃமன் :61) ஏதும் உளரல் அல்ல. மாறாக மனிதத்தன்மையின் ஒரு கட்டாய தேவை ஆகும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1 பக்கம் 107–109 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

**தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)**

**தொலைபேசி எண்:**

***1800 103 2131***

**இந்த TOLL FREE எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.**

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இன்று வரை உம்மே சலீம் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட மஹர் தொகையை விட வேறு எந்தவொரு பெண்ணுக்கும் இவ்வளவு பெரிய மஹர் தொகை நிர்ணயிக்கப்பட்டதை நான் கேட்டதில்லை**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வுமிக்க சஹாபியான ஹஸ்ரத் அபூ தல்ஹா அன்ஸாரி (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**தனது பணிகளில் சிறப்பாக செயல்பட்டு ஏறக்குறைய 62 ஆண்டுகள் மார்க்கத் தொண்டாற்றிய டாக்டர் முஹம்மத் லத்தீஃப் சாஹிப் அவர்களின் வஃபாத் தொடர்பான அறிவிப்பை ஹுஸூர் அவர்கள் செய்தவாறு அன்னாரது ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 31 ஜனவரி 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **31 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) என்ற பெயர் கொண்ட சஹாபியின் நற்குறிப்பை இன்று நான் எடுத்துரைக்க உள்ளேன். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அன்ஸாரி அவர்களின் அசல் பெயர் ஸைத் ஆகும். அன்னார் அன்ஸாரின் கோத்திரமான கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். மேலும் அன்னார் அக்கோத்திரத்தின் தலைவராக இருந்தார்கள். மேலும் அன்னார் அபூ தல்ஹா என்ற சுட்டுப் பெயரால் மிகவும் பிரபல்யமாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களின் தந்தையார் பெயர் சஹல் பின் அஸ்வத் ஆகும். தாயார் பெயர் முபாதா பின்த் மாலிக் ஆகும். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் பைஅத்தே அக்பா, சானியா ஆகியவற்றில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கையில் பைஅத் செய்யும் நற்பாக்கியத்தை பெற்றிருந்தார்கள். அன்னார் பத்ர் உட்பட ஏனைய அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ உபைதா பின் அல்ஜராஹ் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ தல்ஹா அவர்களுடன் அன்னாருக்கு சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் கோதுமை நிறம் கொண்டவர்களாகவும், நடுநிலையான உயரத்தை கொண்டவர்களாகவும் இருந்தார்கள். அன்னார் ஒருபோதும் தலை மற்றும் தாடியின் முடிகளில் சாயம் பூசியதில்லை. முடி எவ்வாறிருந்ததோ அவ்வாறே வைத்திருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 183, 184 அபூ தல்ஹா (ரலி) அன்ஸாரி தொகுதி 2 பக்கம் 150 ஸைத் பின் சஹல் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி), ஹஸ்ரத் அபூதல்ஹா (ரலி) அவர்களுடைய மனைவியின் முதல் கணவரின் மூலமாக பிறந்த மகனாக இருந்தார்கள். ஹஸ்ரத் உம்மே சலீம் அவர்களின் முதல் கணவர் மாலிக் பின் நஸர் ஆவார்கள். அவர் மரணமடைந்த பிறகு ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களுடன் அவர்களின் திருமணம் நடந்தது. அன்னார் மூலம் அப்துல்லாஹ் மற்றும் உமைர் என்ற பிள்ளைகள் பிறந்தன.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 124 – 2010 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 382 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & உம்தத்துல் காரி, ஷரஹ் சஹீஹுல் புகாரி கிதாபுஸ் ஸலாத் தொகுதி 4 பக்கம் 124 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் உம்மே சலீமிற்கு திருமணத்திற்கான தூதுச் செய்தியை அனுப்பினார்கள். அப்போது உம்மே சலீம் அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களைப் போன்ற நபருடன் திருமணம் செய்து கொள்ள நான் மறுத்திருக்க மாட்டேன். ஆனால் நீங்களோ இணை வைப்பவராக இருக்கின்றீர்கள். நானோ முஸ்லிமாக உள்ளேன் என்று கூறினார்கள்.

சுனன் நிஸாயி என்ற ஹதீஸ் நூலில் இது இடம் பெற்றுள்ளது. நான் முஸ்லிம் பெண்மணியாக இருப்பதால் நான் உங்களைத் திருமணம் முடிப்பது எனக்கு ஆகுமானதல்ல. நீங்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டால் அதுவே எனக்குரிய மஹராக இருக்கும். அதனைத் தவிர்த்து வேறு எதனையும் நான் உங்களிடத்தில் வேண்ட மாட்டேன் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் அதுவே அன்னாரின் மஹர் தொகையான நிர்ணயம் செய்யப்பட்டது.

ஹஸ்ரத் சாபித் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இன்று வரை உம்மே சலீம் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட மஹர் தொகையை விட வேறு எந்தவொரு பெண்ணுக்கும் இவ்வளவு பெரிய மஹர் தொகை நிர்ணயிக்கப்பட்டதை நான் கேட்டதில்லை.

(சுனன் நிஸாயி கிதாபுன் நிக்காஹ்... ஹதீஸ் எண் 3341)

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் பத்ர் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போர் நாளன்று குரைஷிகளின் தலைவர்களின் 24 தலைவர்கள் தொடர்பாக கட்டளையிட்டார்கள். அதற்கேற்ப அவர்களை பத்ர் மைதானத்திலிருந்த ஒரு அசுத்தமான கிணற்றில் அந்த குரைஷிகளின் உடல்கள் வீசப்பட்டன. பொதுவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சமுதாயத்தை வெற்றி கொண்டு விட்டால் பின்னர் அந்த மைதானத்தில் மூன்று இரவுகள் தங்குவார்கள். அன்னார் பத்ர் மைதானத்தில் தங்கினார்கள்.

மூன்றாம் நாள் ஆனவுடன் அன்னார் ஒட்டகங்களை கிளப்புவதற்கான கட்டளையை இட்டார்கள். அவ்வாறு அனைவரும் புறப்பட்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் புறப்பட்டார்கள். சஹாபாக்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்கள் ஏதோ ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக செல்கின்றார்கள் என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம். எந்த கிணற்றில் குரைஷிகளின் 24 நபர்களின் உடல்கள் வீசப்பட்டனவோ அந்த கிணற்றிற்கு அருகே சென்று நின்றார்கள். பின்னர் அவர்களின் பெயர்களின், அவர்களின் தந்தையின் பெயர்களையும் விளித்துக் கூறினார்கள்.

இன்ன இன்ன நபர்களின் மகன்களே! இன்ன இன்ன மகன்களின் மகன்களே! நீங்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்கு கட்டுப்பட்டு நடந்திருந்தால் உங்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும் அல்லவா? ஏனென்றால், எங்களது இறைவன் எங்களுடன் செய்த வாக்குறுதியை நாங்கள் உண்மையாக கண்டு கொண்டோம். உங்களது இறைவன் உங்களுடன் செய்த வாக்குறுதியை நீங்கள் அவ்வாறு கண்டு கொண்டீர்களா? என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் இந்த பிணங்களுடன் என்ன பேசிக் கொண்டிருக்கின்றீர்கள்? அவர்கள் உயிருடன் இல்லையே? என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எந்த இறைவனது கரத்தில் முஹம்மதின் உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! நான் கூறுபவற்றை அவர்கள் கேட்பதை விட அதிகமாக நீர் கேட்பதில்லை. அதாவது எனது இந்த கூற்றுகளை இப்போது அல்லாஹ் அவர்கள் வரை சென்றடையச் செய்து கொண்டிருக்கின்றான். அவர்களின் முடிவு தீயதாக அமைந்துள்ளது என்பதை அவர்கள் அறிவர் என்று அன்னார் கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 3976)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஹது போர் நடைபெற்றபோது மக்கள் தோல்வியுற்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு சிதறுண்டு போனார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னிலையில் நின்று கொண்டு, தமது கேடயத்தால் பெருமானார் (ஸல்) அவர்களை பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் எப்படிப்பட்ட அம்பு எய்யும் வீரராக இருந்தார்கள் என்றால் மிக வேகமாக அம்பை செலுத்துபவர்களாக இருந்தார்கள். அன்னார் அந்த நாளன்று இரண்டு மூன்று வில்களை உடைத்திருந்தார்கள். அதாவது எந்த அளவுக்கு வேகமாக அம்பை செலுத்தினார்கள் என்றால் அதனால் வில் உடைந்துபோய் விட்டது. எந்த நபர் அம்புகளை எடுத்துக் கொண்டு சென்றாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த அம்புகளை ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் பக்கம் வீசி விடுங்கள் என்று கூறுவார்கள். அதாவது பிறருடைய அம்புகளையும் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களுக்கு கொடுத்து விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறருக்கு அறிவுரை செய்து வந்தார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் அப்போது நின்று கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தலையை உயர்த்தி மக்களை பார்க்கின்றபோது ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் கூறுவார்கள்.

بِأَبِي أَنْتَ وَأُمِّي يَا رَسُولَ اللهِ، لَا يُصِيبُكَ سَهْمٌ، نَحْرِي دُونَ نَحْرِكَ

எனது தாயும் தந்தையும் உங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. நீங்கள் தயவு செய்து தலையை உயர்த்தி பார்க்காதீர்கள். ஏனென்றால் எதிரிகளின் அம்புகளில் ஏதாவதொரு அம்பு உங்கள் மீது பட்டு விடக்கூடும். மேலும் எனது மார்பு உங்களது மார்புக்கு முன்னால் உள்ளது.

(ஸஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 4064 & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 384,385 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் ஒரே கேடயத்தைக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் மிகச் சிறந்த அம்பு எய்யும் வீரராக இருந்தார்கள். அன்னார் அம்பு எய்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எட்டிப் பார்ப்பார்கள். மேலும் அந்த அம்பு சென்று விழும் இடத்தையும் பார்ப்பார்கள்.

இது புகாரியின் அறிவிப்பாகும். முந்தைய அறிவிப்பும் புகாரியின் அறிவிப்பாகும்.

(ஸஹீஹுல் புகாரி கிதாபுல் ஜிஹாத்.... ஹதீஸ் எண் 2902)

உஹது போரில் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களின் கவிதை படிக்கப்பட்டதாக குறிப்பு இடம் பெற்றுள்ளது. அந்த கவிதையின் பொருள் இதுவாகும்:

وَجْهِي لِوَجْهِكَ الْوِقَاءُ    وَنَفْسِي لِنَفْسِكَ الْفِدَاءُ

எனது முகம் உங்களது முகத்தை பாதுகாப்பதற்காக உள்ளது. எனது உயிர் உங்களது உயிரை பாதுகாப்பதற்காக அர்ப்பணமாகி விட்டது.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 4 முஸ்னத் அனஸ் பின் மாலிக் ஹதீஸ் எண் 13781 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களிடம் நீங்கள் உங்களது மகன்களில் எனக்கு தொண்டாற்றுவதற்காக ஒரு மகனை தேடுங்கள். நான் கைபர் செல்ல உள்ளேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் சவாரியில் தனக்குப் பின்னால் என்னை அமர்த்தி அழைத்துக் கொண்டு சென்றார்கள். அதாவது ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களை அழைத்துக் கொண்டு சென்றார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அப்போது சிறுவனாக இருந்தேன். பருவமடைந்த வயதை எட்டியிருந்தேன். மேலும் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தொண்டாற்றி வந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெரும்பாலும் இந்த துஆ செய்து வந்ததை நான் கேட்டிருக்கின்றேன்.

اَللّٰهُمَّ إِنِّي أَعُوذُبِكَ مِنَ الْهَمِّ وَالْحَزَنِ وَالْعَجْزِ وَالْكَسَلِ
وَالْبُخْلِ وَالْجُبْنِ وَضَلَعِ الدَّيْنِ وَغَلَبَةِ الرِّجَالِ

அதாவது, எனது அல்லாஹ்வே! நான் வேதனை மற்றும் துக்கத்திலிருந்தும், சோம்பேறித்தனத்திலிருந்தும், கருமித்தனத்திலிருந்தும், கோழைத்தனத்திலிருந்தும், கடன்

## திருக்குர்ஆனிலிருந்து...

உங்கள் நண்பர் அல்லாஹ்வும், அவனது தூதரும், மேலும் தொழுகையினை நிலைநாட்டியும், ஸக்காத்துக் கொடுத்தும் வரும் நம்பிக்கையாளர்களுமாவர். அவர்கள் இறைவனிடம் குனிந்தவராயும் இருப்பர். (5:56)

Faizal Hameed Ilahi, Tittacherry

சுமையிலிருந்தும், மக்களின் கடுமையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்பு வேண்டுகின்றேன்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜிஹாத்.... ஹதீஸ் எண் 2893)

மற்றொரு அறிவிப்பில் இவ்வாறும் வந்துள்ளது. இது ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களின் அறிவிப்பாகும். முந்தைய அறிவிப்பு புகாரியில் இடம் பெற்றிருந்தது. இதுவும் புகாரியின் அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வந்தபோது அன்னாருக்கு சேவை செய்ய தொண்டர் யாரும் இருக்கவில்லை. ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் எனது கரங்களைப் பிடித்துக் கொண்டார்கள். மேலும் என்னை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். பின்னர் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் புரியும் தன்மை மிக்க சிறுவன் ஆவான். இவன் உங்களுக்கு தொண்டாற்றுவான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆக, நான் பயணத்திலும், இதர நிலையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தொண்டாற்றி வந்துள்ளேன். நான் என்ன பணி செய்தபோதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம், இந்த பணியை இவ்வாறு ஏன் செய்தீர்கள்? என்று கேட்டதில்லை. மேலும் நான் எந்த பணியை செய்திருக்கவில்லையோ அது தொடர்பாக இந்த பணியை இவ்வாறு நீங்கள் ஏன் செய்யவில்லை? என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதில்லை. அதாவது ஒருபோதும் என்னை கடிந்து கொண்டதில்லை.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் வஸாயா... ஹதீஸ் எண் 2768)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தோம். அஸ்ஃபான் என்ற மக்காவிற்கும் மதீனாவிற்கும் இடையிலுள்ள ஓர் இடத்திலிருந்து ஹஸ்ரத் நபிகள் நயாகம் (ஸல்) அவர்கள் திரும்பினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒட்டகத்தின் மீது அமர்ந்திருந்தார்கள்.

அன்னார் ஸஃப்யா பின்த் ஹுய் அவர்களை அந்த ஒட்டகத்தில் பின்னால் அமர்த்தியிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகம் தடுமாறியது. எனவே இருவரும் கீழே விழுந்து விட்டார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் அவர்கள் இதனைக் கண்டதும் உடனடியாக தனது ஒட்டகத்திலிருந்து கீழே குதித்தார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் உங்களுக்காக அர்ப்பணமாகின்றேன் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முதலில் பெண்ணை கருத்தில் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் தமது முகத்தில் துணியை போட்டுக் கொண்டார்கள். மேலும் ஸஃப்யா அவர்களிடம் சென்றார்கள். அந்த துணியை அவர்கள் மீது வீசினார்கள். அதாவது பர்தாவை மிகவும் கருத்தில் கொண்டார்கள். அந்த இருவரின் சவாரிகளையும் சரி செய்து கொடுத்தார்கள். பின்னர் இருவரும் சவாரியில் ஏறி அமர்ந்து கொண்டார்கள். பின்னர் நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சுற்றிக் கொண்டோம். நாங்கள் மதீனாவின் உயரத்தில் ஓர் இடத்தை அடைந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

آيِبُوْنَ تَائِبُوْنَ عَابِدُوْنَ لِرَبِّنَا حَامِدُوْنَ

அதாவது நாங்கள் திரும்பி வரக்கூடியவர்கள் ஆவோம். நாங்கள் எங்களது இறைவனிடத்தில் தவ்பா செய்யக் கூடியவர்கள் ஆவோம். மேலும் நாங்கள் எங்களது இறைவனை வணங்கக் கூடியவர்கள் ஆவோம். மேலும் நாங்கள் எங்களது இறைவனின் புகழை எடுத்துரைக்கக் கூடியவர்கள் ஆவோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் நுழைகின்ற வரை இந்த சொற்களை கூறிக் கொண்டே இருந்தார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜிஹாத்.... ஹதீஸ் எண் 3085 & லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 3 பக்கம் 172 – 2005 ஆம் ஆண்டு லாஹூரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தைக் குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்: ஒரு முறை அன்னார் கைபர் போரிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அன்னாரின் துணைவியார் ஹஸ்ரத் ஸஃப்யா அவர்களும் அன்னாருடன் இருந்தார்கள். வழியில் ஒட்டகம் தடுமாறியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஸஃப்யா அவர்களும் கீழே விழுந்து விட்டார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களின் ஒட்டகம் அவர்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தது. எனவே அவர்கள் உடனடியாக தனது ஒட்டகத்திலிருந்து கீழே குதித்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது உயிர் உங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. உங்களுக்கு காயம் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லையே? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் சென்ற உடன், ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களே! முதலில் பெண்ணின் பக்கம் செல்லுங்கள். பெண்ணின் பக்கம் செல்லுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டு முறை கூறினார்கள். அவரே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நேசம் கொண்டவர்களாக இருந்தார்கள். அன்னாருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயிரைப் பற்றியே கவலை இருந்தது. அவ்வாறிருக்க வேறு ஒருவர் அப்போது அன்னாருக்கு எவ்வாறு தென்பட்டிருக்க முடியும்? எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், செல்லுங்கள். சென்று பெண்ணை தூக்குங்கள் என்று கூறினார்கள்.

(உஸ்வா ஹஸ்னா, அன்வாருல் உலூம் தொகுதி 17 பக்கம் 126,127)

பெண்களுக்குரிய உரிமையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார்கள். மேலும் அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கைபர் மீது தாக்குதல் நடத்தினார்கள். நாங்கள் அந்த இடத்திற்கு மிக அருகில் சென்று சுபுஹ் தொழுகையை தொழுதோம். அப்போது முற்றிலும் இருளாக இருந்தது. பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சவாரியின் மீது ஏறி அமர்ந்தார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களும் சவாரியை கிளப்பினார்கள்.

நான் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களுக்குப் பின்னால் அமர்ந்திருந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கைபரின் வீதிகளில் குதிரையை ஓட்டினார்கள். எனது கரண்டை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தொடையை தொட்டுக் கொண்டிருந்தது. அதாவது நாங்கள் இருவரும் மிக அருகில் இருந்தோம். இங்கு தொடை என்பது கரண்டைக்கு மேலுள்ள பகுதியாகும்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், நம்பிக்கை கொண்டவர்களையும் தங்கள் நண்பர்களாகக் கொள்கின்றவர்கள் நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினரே. அவர்களே நிச்சயமாக வெற்றி பெறுவர். (5:57)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கிராமத்திற்குள் நுழைந்தபோது இவ்வாறு கூறினார்கள்:

اَللهُ أَكْبَرُ خَرِبَتْ خَيْبَرُ إِنَّا إِذَا نَزَلْنَا بِسَاحَةِ قَوْمٍ فَسَاءَ صَبَاحُ الْمُنْذَرِيْنَ

அதாவது அல்லாஹ் மிகப் பெரியவன் ஆவான். கைபர் வெறிச்சோடி விட்டது. நாம் ஒரு சமுதாயத்தின் இடத்தில் முகாமிட்டுக் கொள்ளும் போது பின்னர் அந்த மக்களின் காலைப்பொழுது தீயதாகவே இருக்கும். அதிலும் குறிப்பாக எவர்கள் இறை தண்டனையைப் பற்றி எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கின்றார்களோ அவர்களுக்கு மிகத் தீயதாக இருக்கும். இதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று முறை கூறினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மக்கள் தமது பணிகளுக்காக இந்த இடத்தை விட்டு வெளியேறியபோது முஹம்மது (ஸல்) அவர்களே! என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நாங்கள் அவர்களுடன் போர் செய்து வெற்றி பெற்றோம். கைதிகளை ஒன்று கூட்டினோம். ஹஸ்ரத் தஹ்யா கல்பி அவர்கள் வந்தார்கள். மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த கைதிகளிலிருந்து ஓர் அடிமைப் பெண்ணைத் எனக்கு வழங்குங்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், செல்லுங்கள். சென்று ஒரு பெண்ணை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அப்போது அவர்கள் ஹய்யின் மகளான ஸஃப்யா அவர்களை தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அப்போது ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நீங்கள் தஹ்யாவிற்கு குரைலா மற்றும் நஸீர் கோத்திரத்தின் தலைவர் ஸஃப்யா பின்த் ஹுய் அவர்களை வழங்கி விட்டீர்கள். அந்தப் பெண்மணியோ உங்களுக்கு மட்டுமே தகுதி படைத்தவர் ஆவார் என்று கூறினார்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஃப்யாவை உங்களுடன் அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள். அவர் சென்று ஹஸ்ரத் ஸஃப்யாவை அழைத்து வந்தார். ஹஸ்ரத் தஹ்யா அவர்களும் அன்னாருடன் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் தஹ்யா அவர்களை நோக்கி, நீங்கள் இந்த கைதிகளில் வேறு ஒருவரை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃப்யா அவர்களை விடுதலை செய்தார்கள். பின்னர் அவர்களை திருமணம் செய்து கொண்டார்கள். அப்போது ஹஸ்ரத் சாபித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடம், அபூ ஹம்ஸா அவர்கள் அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த பெண்ணிற்கு என்ன மஹர் கொடுத்தார்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த பெண்ணை விடுதலை செய்திருந்தார்கள். பின்னர் அவர்களுடன் திருமணம் செய்து கொண்டார்கள். அவர்களை விடுதலை செய்ததே அன்னாரின் மஹர் தொகையாக இருந்தது.

இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது வழிப்பாதையில் இருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் உம்மே சலீம் அவர்கள் ஹஸ்ரத் ஸஃப்யா அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக ஆயத்தப்படுத்தினார்கள். பின்னர் அங்கு திருமணம் நடந்தது. பின்னர் அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: மறுநாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யாரிடத்தில் எந்த பொருட்கள் இருக்கின்றதோ அதனை எடுத்துக் கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோலினால் ஆன சாப்பாட்டு விரிப்பை விரித்தார்கள். ஒருவர் பேரீத்தம் பழத்தை கொண்டு வந்தார். மற்றொருவர் நெய் கொண்டு வந்தார்.

அப்துல் அஸீஸ் கூறுகின்றார்: எனக்கு நினைவு உள்ளது. சஹாபாக்கள் சத்து என்ற ஒரு வகையான உணவைக் குறித்து குறிப்பிட்டார்கள். பின்னர் அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அதனை ஆயத்தப்படுத்தினார்கள். இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வலீமா விருந்தாக கருதப்பட்டது.

**(சஹீஹுல் புகாரி கிதாபுஸ் சலாத்... ஹதீஸ் எண் 371)**

மற்றொரு அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. கோட்டை வெற்றி கொள்ளப்பட்டபோது ஹஸ்ரத் ஸஃப்யா அவர்கள் தஹ்யா அவர்களுடைய பங்கில் சென்றார்கள். சஹாபாக்களில் பலர் ஒருவர் மட்டுமல்ல; ஏராளமான நபர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் சென்று அல்லாஹ்வையும், அவனது தூதரையும் புகழ்ந்து பேசினார்கள். மேலும் அந்தஸ்தைப் பொருத்தவரை ஹஸ்ரத் ஸஃப்யா அவர்கள் உங்களுக்கே உரியவர்கள் ஆவர்.

எனவே நீங்கள் உங்களுக்காக அவர்களை தேர்ந்தெடுத்துக் கொள்வதே உகந்ததாகும். தாங்கள் அவர்களை திருமணம் முடித்துக் கொள்ளுங்கள் என்றும் கூறினார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் தஹ்யா அவர்களுக்கு செய்தி அனுப்பினார்கள். நீங்கள் 7 அடிமைகளை பெற்றுக் கொண்டு ஹஸ்ரத் ஸஃப்யா அவர்களை உம்மே சலீம் அவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள். அன்னார் அவர்களை தம்முடன் வைத்துக் கொள்வார்கள் என்று கூறினார்கள். பின்னர் ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை திருமணம் செய்து கொண்டார்கள்.

**(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 8 பக்கம் 97,98 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹுனைன் போர் நாளன்று எந்த நபர் ஒரு காஃபிரை கொலை செய்வாரோ அந்த காஃபிரின் செல்வம் மற்றும் இதர பொருட்கள் அவருக்கே கிடைக்கும். அந்த நாளன்று ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் 20 காஃபிர்களை கொன்றார்கள். அவர்களின் பொருட்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உம்மே சலீம் அவர்களைப் பார்த்தார்கள். அன்னாரிடம் ஒரு கத்தி இருந்தது. உம்மே சலீம் அவர்களே! இது என்ன? என்று அன்னாரிடம் கேட்டார்கள். அதற்கு அன்னார் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனது எண்ணம் என்னவென்றால், ஒரு காஃபிர் எனக்கு அருகில் வந்தால் நான் அவரை கத்தியால் குத்தி அவரது வயிற்றை கிழித்து விட வேண்டும் என்பதாகும். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் இதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். இது சுனன் அபூதாபூதில் இடம் பெற்றுள்ள அறிவிப்பாகும்.

**(சுனன் அபூதாவூது கிதாபுல் ஜிஹாத்.... ஹதீஸ் எண் 2718)**

## திருக்குர்ஆனிலிருந்து...

வேதத்தையுடையவர்கள் நம்பிக்கை கொண்டும் இறையச்சம் கொண்டும் இருப்பார்களாயின் நிச்சயமாக நாம் அவர்களின் தீமைகளை அவர்களை விட்டும் அகற்றி நிச்சயமாக அவர்களை அருட்கொடைகளைக் கொண்ட தோட்டங்களில் நுழையச் செய்திருப்போம். **(5:66)**

A.Basheer Ahmad, Melapalayam

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: படையில் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களின் குரல் மட்டுமே ஒரு கூட்டத்தின் குரலின் மீது மேலோங்கி இருக்கும்.

வேறு சில அறிவிப்புகளில் ஜமாஅத் என்ற சொல்லிற்கு பகரமாக ரஜல் அதாவது மனிதன் என்ற சொல் வந்துள்ளது. அதாவது 100 மனிதர்கள் மற்றும் அல்ஃபே ரஜுல் அதாவது ஆயிரம் மனிதர்கள் என்று வந்துள்ளது. அதாவது ஆயிரம் நபர்களைப் பற்றிய குறிப்பு வந்துள்ளது. அதாவது அவர்களின் குரல் மிக உரத்த குரலாக இருந்தது.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 4 பக்கம் 286 முஸ்னத் அனஸ் பின் மாலிக் ஹதீஸ் எண் 12119 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்தில் அஸ்ஹாப் தொகுதி 4 பக்கம் 261 – 2010 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 382 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 34 ஆம் ஆண்டு மதீனாவில் மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அன்னாரின் ஜனாஸா தொழுகையை நடத்தினார்கள். அப்போது அன்னாருக் வயது 70 ஆக இருந்தது.

பஸ்ரா வாசிகளைப் பொருத்தவரை, அன்னாரின் மரணம் ஒரு கடல் பயணத்தின்போது நடந்தது. ஒரு தீவில் அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 385 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஜிஹாதின் காரணமாக ஆற்றல் குறைந்து விடக்கூடாது என்பதற்காக நஃபிலான நோன்புகளை நோற்காமல் இருந்து வந்தார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்ட பிறகு ஈதுல் ஃபித்ர் மற்றும் ஈதுல் அழ்கா ஆகிய நாட்களைத் தவிர்த்து வேறு எந்த நாட்களிலும் அன்னார் நோன்பு நோற்காமல் இருப்பதைக் கண்டதில்லை. அதன் பிறகு அன்னார் தொடர்ந்து நோன்பு நோற்றிருந்தார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜிஹாத்.... ஹதீஸ் எண் 2828)

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களின் விருந்து உபசரிப்பு தொடர்பான ஒரு சம்பவம் கிடைக்கின்றது. ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். தனது துணைவியாரிடம் வீட்டின் நிலவரத்தை அறிந்து வர ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நபரை அனுப்பி வைத்தார்கள். எங்களிடத்தில் தண்ணீரைத் தவிர்த்து வேறு எதுவும் இல்லை என்று அன்னார் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த விருந்தினரை எவர் தம்முடன் வைத்துக் கொள்வார்? என்றோ அல்லது இவரை எவர் விருந்தினராக தமது வீட்டில் தங்க வைத்துக் கொள்வார் என்று கேட்டார்கள். நான் தங்க வைத்துக் கொள்கின்றேன் என்று அன்ஸார்களில் ஒருவர் கூறினார். எனவே அவர் அவரை தம்முடன் அழைத்துக் கொண்டு தமது மனைவியிடம் சென்றார். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விருந்தினர்களுக்கு மிக நல்ல முறையில் விருந்து உபசரிப்பு செய்யுங்கள் என்று தமது மனைவியிடம் கூறினார். அதற்கு அவரது மனைவி, என்னிடம் எனது பிள்ளைகளுக்காக இருக்கின்ற கொஞ்சம் உணவைத் தவிர்த்து வேறு எதுவும் இல்லை என்று கூறினார். அதற்கு உம்மிடமுள்ள உணவை ஆயத்தப்படுத்துங்கள். விளக்கை ஏற்றுங்கள். தமது பிள்ளைகள் இரவு உணவைக் கேட்கும்போது அவர்களை தூங்க வைத்து விடுங்கள் என்று கூறினார்.

எனவே அவரின் மனைவி இருந்த உணவை ஆயத்தப்படுத்தினார். விளக்கை ஏற்றினார். மேலும் தனது பிள்ளைகளையும் தூங்க வைத்தார். பின்னர் அவரது மனைவி எழுந்து விளக்கை சரி செய்வது போன்று விளக்கை அணைத்து விட்டார். மேலும் கணவன் மனைவி இருவரும் விருந்தினர்களுடன் உண்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை விருந்தினர்களுக்கு ஏற்படுத்தினார்கள். ஆனால் அவர்கள் இருவரும் வெறும் வயிருடன் இரவைக் கழித்தார்கள். பகல் விடிந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் அவர் சென்றார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த இரவு அல்லாஹ் சிரித்தான். உங்கள் இருவரின் செயலில் இறைவன் மகிழ்ச்சியடைந்தான். மேலும் அல்லாஹ் இந்த வஹீயை இறக்கினான் என்று கூறினார்கள்.

وَيُؤْثِرُوْنَ عَلٰٓى اَنْفُسِهِمْ وَلَوْ كَانَ بِهِمْ خَصَاصَةٌ
وَمَنْ يُّوْقَ شُحَّ نَفْسِهٖ فَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ

அதன் பொருள்: அவர்கள் சுயமே தமது உயிர்களை விட பிறருக்கு முன்னுரிமை வழங்குகின்றனர். அவர்கள் கஷ்டத்தில் இருந்தபோதிலும் பிறருக்கு முன்னுரிமை வழங்கினர். எவர் ஒருவர் கருமித்தனத்திலிருந்து பாதுகாக்கப்படுவாரோ அவர்களே வெற்றி பெறக் கூடியவர்கள் ஆவர்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3798 & உம்தத்துல் காரி ஷரஹ் சஹீஹுல் புகாரி கிதாபுல் மனாகிப் அல் அன்ஸார் தொகுதி 16 பக்கம் 364 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறை முடியை திருத்தியபோது அன்னார் முடிகளில் கொஞ்சம் முடிகளைப் பெற்றுக் கொண்ட முதல் நபர் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களாக இருந்தார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் வுளூ... ஹதீஸ் எண் 171)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உம்மே சலீம் அவர்களிடம் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குரல் பலவீனமாக இருப்பதாக கேட்கின்றேன். அன்னாருக்கு பசி இருப்பதாக நான் கருதுகின்றேன். உங்களிடம் உண்பதற்காக ஏதாவது இருக்கின்றதா? என்று கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் உம்மே சலீம் அவர்கள் கூறினார்கள்: ஆம்! பின்னர் கோதுமையினாலான சில ரொட்டிகளை எடுத்தார்கள். ஒரு துணியை எடுத்து அதில் ரொட்டியை பொதிந்தார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மர்யமின் மகன் மஸீஹ் ஒரு தூதரேயன்றி வேறில்லை. நிச்சயமாக அவருக்கு முன்னுள்ள தூதர்கள் மரணமடைந்து விட்டனர். அவருடைய தாயார் நேர்மையான பெண்ணாக இருந்தார். அவர்கள் இருவரும் உணவு உண்டு வந்தனர். அவர்களுடைய நன்மைக்காக அடையாளங்களை எவ்வாறு நாம் விளக்கிக் கூறுகின்றோம் என்பதையும், அவர்கள் எவ்வாறு திருப்பப்படுகின்றனர் என்பதையும் பார்ப்பீராக. (5:76)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

பின்னர் அதனை என்னிடம் கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி என்னை அனுப்பி வைத்தார்கள். நான் அதனை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் இருப்பதைக் கண்டேன். மேலும் அன்னாருடன் சில மக்களும் இருந்தார்கள். நான் சென்று அங்கு நின்று கொண்டேன் என்று ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உம்மை அபூ தல்ஹா (ரலி) அவர்கள் அனுப்பி வைத்தார்களா? என்று கேட்டார்கள். ஆம் என்று நான் கூறினேன். அதற்கு அன்னார் உணவைக் கொடுத்து அனுப்பி வைத்தார்களா? என்று கேட்டார்கள். அதற்கு ஆம் என்று நான் கூறினேன். தம்முடன் இருந்த மக்களை நோக்கி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், புறப்படுங்கள் என்று கூறினார்கள். அந்த உணவைப் பெற்றுக் கொள்வதற்கு பகரமாக தன்னுடன் இருந்த தோழர்களை அழைத்துக் கொண்டு உணவையும் பெற்றுக் கொண்டு அன்னார் சென்றார்கள். நான் அன்னாருக்கு முன்னால் சென்று கொண்டிருந்தேன். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களை அடைந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இங்குதான் வந்து கொண்டிருக்கின்றார்கள் என்று அவர்களிடம் கூறினேன்.

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் தனது மனைவியிடம் உம்மே சலீம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களை அழைத்துக் கொண்டு இங்கு வந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு உணவு கொடுக்கின்ற அளவுக்கு நம்மிடம் உணவும் இல்லை. இருந்த ரொட்டிகளை நாம் அனுப்பி விட்டோம். அது திரும்ப வந்து கொண்டிருக்கின்றது. அதற்கு அவர்களின் மனைவி, அல்லாஹ்வின் அவனது தூதரும் நன்கறிவர் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்தித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டிற்கு வந்தார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் அன்னாருடன் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உம்மே சலீமே! உம்மிடம் உள்ளதை கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். எனவே அவர்கள் ரொட்டிகளை எடுத்து வந்தார்கள். பின்னர் இந்த ரொட்டிகளை துண்டுகளாக்குங்கள் என்று கூறினார்கள். அன்னாரும் அவ்வாறே செய்தார்கள். ஹஸ்ரத் உம்மே சலீம் அவர்கள் அதில் கொஞ்சம் நெய்யை ஊற்றினார்கள். பின்னர் அதனை குழம்பு போன்று பயன்படுத்த கொடுத்தார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ் விரும்பியபடி அந்த ரொட்டிகளின்மீது துஆ செய்தார்கள். பின்னர் பத்து நபர்களை உள்ளே வர அனுமதியுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவர்கள் வயிறு நிறைய உணவு உண்டார்கள். பின்னர் அவர்கள் வெளியேறினார்கள். பின்னர் பத்து நபர்களுக்கு அனுமதி வழங்குமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. அவர்களும் வயிறார உணவு உண்டார்கள். பின்னர் வெளியே சென்றார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேலும் பத்து நபர்களுக்கு அனுமதி வழங்குங்கள் என்று கூறினார்கள். அவர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. அவர்களும் வயிறு நிறைய உணவு உண்டார்கள். அவர்கள் வெளியே சென்றார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்து நபர்களுக்கு அனுமதி வழங்குமாறு கூறினார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவர்களும் வயிறு நிறைய உணவு உண்டார்கள். பின்னர் அவர்கள்ள வெளியேறினார்கள்.

சுருக்கமாக, அவர்கள் அனைவரும் உணவு உண்டனர். வயிறு நிறைய உணவு உண்டனர். அந்த மக்கள் 70 அல்லது 80 நபர்களாக இருந்தனர். (சஹீஹுல் புகாரி கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3578)

இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆக்களின் பரக்கத்துகளின் குறிப்பில் கிடைக்கின்றது.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் மதீனாவில் அன்ஸார்களில் அனைவரையும் விட மிக அதிகமான பேரீத்தம் பழ தோட்டங்களை வைத்திருந்தார்கள். அன்னாருக்கு மிகவும் பிரியமான தோட்டமாக பள்ளிவாசலுக்கு முன்பு இருந்த பேர்ஹா என்ற தோட்டம் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த தோட்டத்திற்கு வருவார்கள். அங்குள்ள சுத்தமான தண்ணீரை அருந்துவார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

அதாவது நீங்கள் உங்களது விருப்பமானவற்றிலிருந்து செலவு செய்யாதவரை உங்களால் ஒருபோதும் நன்மையை பெற முடியாது. (3:93)

இந்த வசனம் இறங்கிய உடன் எனது சொத்துக்களில் எனக்கு மிகவும் விருப்பத்திற்குரிய சொத்தாக பேரூஹா என்ற தோட்டம் இருந்தது. அதனை நான் அல்லாஹ்விற்காக சதகாவாக வழங்கி விடுகின்றேன். இது அல்லாஹ்வின் பார்வையில் ஒப்புக் கொள்ளப்பட்ட நன்மையாக இருக்கும் என்றும் மேலும் அது ஒரு கருவூலமாக இருக்கும் என்றும் நான் நம்புகின்றேன். எனவே இதனை தாங்கள் எங்கு விரும்புகின்றீர்களோ அங்கு செலவு செய்யுங்கள் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், சபாஷ்! இது பயனளிக்கக்கூடிய செல்வமாகும் என்றோ அல்லது என்றும் நிலைபெறக்கூடிய செல்வமாகும் என்றும் கூறினார்கள்.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் கூறினீர்கள். நான் அதைக் கேட்டு விட்டேன் என்று கூறினார்கள். ஆனால் அதனை நீங்கள் உங்கள் நெருங்கிய உறவினருக்கு பங்கிட்டு கொடுப்பதையே உகந்ததாக கருதுகின்றேன் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஹுஸூரின் கட்டளைக்கிணங்க நான் அவ்வாறே செய்து விடுகின்றேன்.

எனவே ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் அந்த தோட்டத்தை தனது நெருங்கிய உறவினர்களுக்கு மத்தியிலும் தனது சிறிய தந்தையாரின் மகன்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்து விட்டார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் வஸாயா... ஹதீஸ் எண் 2769)

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களுக்கு இந்த மரியாதையும், இந்த பாக்கியமும் கிடைத்துள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு மகள் இறந்த போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப அந்த கபரில் இறங்கினார்கள். மேலும் ஹுஸூர் (ஸல்) அவர்களின் அருமை மகளின் அருளுக்குரிய உடலை கபரில் இறக்கி வைத்தார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜனாயிஸ்... ஹதீஸ் எண் 1285)

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் கூறுவீராக: அல்லாஹ்வை விட்டுவிட்டு உங்களுக்குத் தீமையோ, நன்மையோ செய்யும் ஆற்றல் இல்லாதவற்றையா நீங்கள் வணங்குகின்றீர்கள்? அல்லாஹ்வே நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான். (5:77)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை மதீனாவாசிகள் திடீரென அச்சத்திற்கு உள்ளானார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களின் குதிரையில் சவாரி செய்தார்கள். அது மெதுமெதுவாக சென்றது. அல்லது அதன் வேகம் குறைவாக இருந்தது. அன்னார் திரும்பி வந்தபோது ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களிடம், நாம் உமது குதிரையை ஒரு நதியாக கண்டோம். அது மிக வேகமாக ஓடுகின்றது என்று கூறினார்கள். அதற்குப் பிறகு ஓட்டத்தில் அந்த குதிரைக்கு நிகராக எவராலும் போட்டிப் போட முடியாமல் போனது.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜிஹாத்... ஹதீஸ் எண் 2867)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களில் ஒருவராக இருந்து பழகுவார்கள். எனது சிறிய சகோதரரிடம் நகைச்சுவையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுவார்கள்: உபூ உமைரே! நவீர் என்ன செய்தது?

அபூ உமைர் குருவி ஒன்றை வளர்த்து வந்தார். கருவியை நவீர் என்று கூறுவார்கள். அது இறந்து போனது. அதனால் அவருக்கு மிகவும் துக்கம் ஏற்பட்டது. அதனை குறிப்பிடும் வகையில் இப்போது அது பறந்து விட்டதா? அல்லது இறந்து விட்டதா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நகைச்சுவையாக கூறினார்கள். எவ்வாறிருப்பினும் அந்த சிறுவனை இந்த சம்பவத்தின் காரணமாக நகைச்சுவை செய்து வந்தார்கள்.

பெரும்பாலும் இவ்வாறு நடந்து வந்தது. அதாவது தொழுகைக்கான நேரம் ஆகி விடும். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டில்தான் இருப்பார்கள். அந்நிலையில் விரிப்பை விரிக்கும்படி கட்டளையிடுவார்கள். பின்னர் அதில் சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர்ந்து விடுவார்கள். நாங்கள் மற்றொரு விரிப்பை எடுத்து விரிப்போம். மேலும் சுத்தம் செய்வோம். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகைக்காக நிற்பார்கள். நாங்களும் அன்னாருக்குப் பின்னால் தொழுகைக்காக நின்று கொண்டு தொழுகையை நிறைவேற்றுவோம்.

(சுனன் இப்னு மாஜா, கிதாபுல் அதப்... ஹதீஸ் எண் 3720 &
சஹீஹுல் புகாரி கிதாபுல் அதத்... ஹதீஸ் எண் 6203)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அப்துல்லாஹ் பின் அபூ தல்ஹா அன்ஸாரி அவர்கள் பிறந்தார்கள். அவரை எடுத்துக் கொண்டு நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றேன். நான் எனது ஒட்டகத்திலிருந்து இறங்கி அதைக் கட்டிக் கொண்டிருந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உம்மிடத்தில் பேரீத்தம் பழம் இருக்கின்றதா? என்று கேட்டார்கள். அதற்கு நான் ஆம் என்று கூறினேன்.

மேலும் சில பேரீத்தம் பழங்களை அன்னாரிடம் கொடுத்தேன். அதனை அன்னார் தமது வாயில் போட்டார்கள். மேலும் நன்றாக சவைத்தார்கள். மேலும் குழந்தையின் வாயில் வைத்தார்கள். குழந்தையும் அதை நன்றாக ருசித்து சாப்பிட்டது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸார்களின் பேரீத்தம் பழங்களை நாம் நேசிக்கின்றோம். குழந்தைக்கும் அது பிடித்திருந்தது. எனவே அந்த குழந்தைக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் என்று பெயர் வைத்தார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஆதாப்... ஹதீஸ் எண் 2144)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களின் மகன் நோயுற்றிருந்தார். அப்போது ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் வெளியூர் சென்றிருந்தார்கள். அப்போது குழந்தை மரணமடைந்தது. ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் திரும்பி வந்தவுடன் தனது மனைவியிடம் பிள்ளை எப்படி உள்ளது என்று கேட்டார்கள். முன்பை விட இப்போது நிம்மதியாக உள்ளது என்று ஹஸ்ரத் உம்மே சலீம் அவர்கள் கூறினார்கள். பின்னர் இரவு உணவை வழங்கினார்கள். அவர்கள் உண்டார்கள். இரவைக் கழித்தார்கள். பின்னர் குழந்தை இறந்து விட்டது. எனவே அவனை நல்லடக்கம் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

இந்த விஷயத்தை காலையில் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களுக்கு பிள்ளைகள் பிறக்க துஆ செய்தார்கள். அதன் பிறகு அந்த தம்பதிக்கு மகன் பிறந்தான்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஆதாப்... ஹதீஸ் எண் 2144)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்: ஒரு நம்பிக்கையாளருக்கு உயிரை தியாகம் செய்வது உண்மையில் ஒரு பொருட்டே அல்ல.

மேலும் அன்னார் கூறினார்கள்: காலிபை பற்றி மக்கள், அவர் மது அருந்தி வந்தாரா? இல்லையா? என தர்க்கம் செய்கின்றனர். ஆனால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அவர் எனது உறவினர் ஆவார். அவர் மது அருந்தி வந்ததாக நான் எனது பாட்டியிடமிருந்து கேட்டுள்ளேன்.

ஆக மது அருந்தும் பழக்கமுடையவர் ஒரு கவிதையில் கூறுகின்றார். உயிர் என்பது அவனால் வழங்கப்பட்ட ஒன்றாகும். உண்மை என்னவென்றால் அதற்குரிய உரிமை வழங்கப்படவில்லை.

அதாவது நாம் இறை வழியில் உயிரை அர்ப்பணிக்கின்றோம் என்றால் அதனால் என்ன ஆகிவிடும்? இந்த உயிரை வழங்கியதே அந்த இறைவன்தானே? எனவே இறைவனது கட்டளையை நிறைவேற்றும் வகையில் ஒரு நபர் உயிரை விட்டு விடுகின்றார் என்றால் அது ஒன்றும் பெரிய தியாகம் அல்ல. ஏனென்றால் அந்த உயிரும் கூட அந்த இறைவனுடையதாகும். ஒருவர் ஒப்படைத்த அமானிதத்தை திருப்பி ஒப்படைப்பது பெரிய தியாகம் அல்ல.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹதீஸில் ஒரு சஹாபியாவின் சம்பவம் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரின் கணவரை ஒரு இஸ்லாமிய தொண்டிற்காக அதாவது ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களை வெளியூர் அனுப்பி வைத்தார்கள். அப்போது அவரது பிள்ளை நோயுற்றிருந்தது. தனது குழந்தையின் நோயினால் இயற்கையாகவே அவர் மிகவும் கவலையில் இருந்தார். அந்த சஹாபி திரும்பி வந்தார்.

ஆனால் அவர் வெளியூரில் இருந்தபோது அந்த குழந்தை மரணடைந்து விட்டது. தாய் அந்த மரணித்த குழந்தை மீது துணியிட்டு மூடினாள். மேலும் குளித்து சுத்தமாகி நறுமணம் பூசிக் கொண்டாள். மிகுந்த தைரியத்துடன் தனது கணவரை வரவேற்றாள். அந்த சஹாபி வீட்டிற்கு வந்தார். அவர் வீட்டிற்கு வந்த உடனேயே குழந்தை எப்படி உள்ளது என்று கேள்வி கேட்டார். அதற்கு அந்த சஹாபியா குழந்தை இப்போது மிக நிம்மதியாக உள்ளது என்று கூறினார்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்துள்ள நல்லவற்றை ஆகாதவையாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். மேலும் (இறைவனால் ஏற்படுத்தப்பட்ட) வரம்பை மீறாதீர்கள். வரம்பு மீறுவோரை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை. (5:88)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

பிறகு அவர்கள் உணவு உண்டனர். பின்னர் அமைதியாக திருப்தியுடன் படுக்கைக்கு சென்று படுத்தனர். தாம்பத்திய உறவுகள் முழுமையடைந்தன. அதன் பிறகு மனைவி கூறினாள். நான் உங்களிடம் ஒரு விஷயத்தை கேட்க விரும்புகின்றேன். அது என்ன என்று கணவர் கேட்டார். அதற்கு ஒரு நபர் ஒருவரிடம் அமானிதமாக ஒன்றைக் கொடுத்து சில காலம் கடந்த பிறகு அதனைத் திரும்பப் பெற விரும்பினால் அந்தப் பொருளை அந்த நபர் திருப்பிக் கொடுத்து விட வேண்டுமா? இல்லையா? என்று கேட்டார்.

அதற்கு எந்த முட்டாள் அமானிதத்தை திருப்பி ஒப்படைக்காமல் இருப்பார் என்று கணவர் கூறினார். அதற்கு நான் அமானிதத்தை திருப்பி ஒப்படைக்கின்றேனே என்ற வேதனை கடைசியில் அவருக்கு இருக்கத்தானே செய்யும் என்று மனைவி கேட்டாள். அதற்கு, வேதனை எப்படி இருக்கும்? பொருள் அவருடையதல்ல. அவ்வாறிருக்க அந்த பொருளை திருப்பி ஒப்படைப்பதால் அவருக்கு என்ன வேதனை இருக்க முடியும்? என்று கூறினார்.

அப்போது மனைவி கூறினார். நல்லது. இதுதான் விஷயம் என்றால் பிறகு நமது குழந்தை இறைவனால் வழங்கப்பட்ட ஒரு அமானிதமாக இருந்தது. அதனை அல்லாஹ் நம்மிடமிருந்து திரும்பி பெற்றுக் கொண்டான் என்று அந்த மனைவி கூறினார்.

அக்காலத்து பெண்களிடம் இந்த அளவுக்கு தைரியம் காணப்பட்டது. எனவே உயிரைக் கொடுப்பது என்பது ஒரு பொருட்டல்ல. குறிப்பாக நம்பிக்கையாளருக்கு இதுவொரு சாதாரண காரியமாகும்.

(1948 ஆம் ஆண்டு லாஹூரில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் நிகத்தப்பட்ட சொற்பொழிவு, அன்வாருல் உலூம் தொகுதி 21 பக்கம் 53,54)

பின்னர் ஏற்கனவே கூறப்பட்ட அந்த ஹதீஸின் அடிப்படையில் அவர்களுக்காக துஆ செய்தார்கள். அவர்களுக்கு பின் நாட்களில் குழந்தை பிறந்தது. மகன் பிறந்தான். அல்லாஹ் அவர்கள் மீது பெரும் அருள் செய்தான்.

அன்ஸார்களில் ஒருவர் அறிவிக்கின்றார்: நான் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களின் புதிய பிள்ளைகளை கண்டேன். 9 மகன்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் காரியாக இருந்தனர்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜனாயிஸ்... ஹதீஸ் எண் 1301)

ஆஸிம் அஹ்வல் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாத்திரம் ஒன்றை ஹஸ்ரத் அனஸ் அவர்களிடம் கண்டேன். அதில் கீரல் ஏற்பட்டிருந்தது. அதனை ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் வெள்ளியால் நிரப்பினார்கள். அந்த பாத்திரம் அழகிய அகலமான நல்ல மரத்தால் உருவாக்கப்ப்பட்ட பாத்திரமாக இருந்தது.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த பாத்திரத்தில் பல முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தண்ணீர் அருந்தியுள்ளார்கள்.

இப்னு ஸீரீன் கூறுகின்றார்கள்: அந்த பாத்திரம் இரும்பைக் கொண்டு இணைக்கப்பட்டது. அந்த இடத்தில் தங்கம் மற்றும் வெள்ளியைக் கொண்டு நிரப்ப ஹஸ்ரத் அனஸ் அவர்கள் விரும்பினார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் அன்னாரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதனை உருவாக்கினார்களோ அதில் எந்த மாற்றத்தையும் செய்யாதீர்கள் என்று கூறினார்கள். அன்னாரும் தமது எண்ணத்தை மாற்றி விட்டார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் அஷ்ரபா... ஹதீஸ் எண் 5638)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள்அறிவிகின்றார்கள். நான் ஹஸ்ரத் அபூ தல்ஹா அன்ஸாரி (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூ உபைதா பின் அல்ஜராஹ் மற்றும் ஹஸ்ரத் அபீ பின் கஅப் அவர்களுக்கு நான் மது ஊற்றிக் கொண்டிருந்தேன். இதற்கிடையில் ஒருவர் வந்து மது ஹரமாக்கப்பட்டு விட்டது என்று கூறினார்கள். அந்த நபரின் கூற்றைக் கேட்ட உடனேயே மது பாண்டங்களை உடைத்து விடு ஹஸ்ரத் அனஸ் அவர்களுக்கு கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஒரு கல்லால் மது பாண்டங்களின் அடிப்பகுதியில் அடித்து உடைத்து விட்டேன். (சஹீஹுல் புகாரி... ஹதீஸ் எண் 7253)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது மதீனாவில் ஒரு நபர் இருந்தார். அவர் லுஹத் கட்டக்கூடியவராக இருந்தார். மற்றொருவர் நேரான கபரை கட்டக் கூடியவராக இருந்தார். சஹாபி கூறினார்: நாம் நமது இறைவனிடம் நன்மையை வேண்டுவோம். இருவருக்கும் அழைப்பு விடுப்போம். இருவரில் எவர் பின்தங்கி வருவாரோ அவரை விட்டு விடுவோம். அதாவது எவர் முதலில் வருவாரோ அவரைக் கொண்டு பணி செய்வோம் என்று கூறினார்கள்.

ஆக இருவருக்கும் செய்தி அனுப்பப்பட்டது. லுஹது கட்டக் கூடியவர் முதலில் வந்தார். எனவே சஹாபாக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கபரை அவரைக் கொண்டு வடிவமைத்தார்கள். லஹத் கபரை கட்டக்கூடிய நபர் ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) ஆவார்கள். நேரான கபரை கட்டக் கூடியவராக ஹஸ்ரத் அபூ உபைதா பின் அல்ஜராஹ் அவர்கள் ஆவார்கள்.

(சுனன் இப்னு மாஜா, கிதாபுல் ஜனாயிஸ்... ஹதீஸ் எண் 1557)

இது அவர்களைப் பற்றிய முழுமையான குறிப்பாகும்.

இப்போது நான் சுருக்கமாக ஒரு மர்ஹூமின் நற்குறிப்பை எடுத்துக் கூறுவேன். தொழுகைக்குப் பிறகு அவரது ஜனாஸாவையும் நடத்துவேன். அவர்களது பெயர் மதிப்பிற்குரிய பாபு முஹம்மது லத்தீஃப் சாஹிப் அமிர்தஸரி ஆகும். அவர்கள் மியான் நூர் முஹம்மது சாஹிப் என்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியின் மகன் ஆவார்கள். ஜனவரி மாதம் 26 ஆம் தேதி அன்னாரின் 90 வது வயதில் அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இறை அருளால் அன்னார் மூஸியாக இருந்தார்கள். ஜமாஅத்தின் பிரபலமான முபல்லிக்காகிய மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது சித்தீக் சாஹிப் அமிர்தஸரி அவர்கள் மர்ஹூமின் இளைய சகோதரர் ஆவார். பாபு லத்தீஃப் சாஹிப் அவர்களின் தந்தை மதிப்பிற்குரிய மியான் நூர் முஹம்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். அன்னார் இளமைப் பருவத்தில் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் பாபு லத்தீஃப் சாஹிப் அவர்களை அழைத்துக் கொண்டு சென்றார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் இளமைப் பருவத்திலேயே வக்ஃபிற்காக தனது மகனை ஒப்படைத்தார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! போதைப் பொருள்கள், சூதாட்டம், சிலை (வழிபாடு)கள், குறி பார்க்கும் அம்புகள் ஆகியன அருவருக்கத் தக்க(தும்) ஷைத்தானின் செயலுமேயாகும். எனவே நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, அவற்றிலிருந்து (முற்றிலும்) விலகிக் கொள்ளுங்கள். (5:91)

M.Y. Shahul Hameed, Melapalayam

அதற்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். ஏற்கனவே ஒரு மகன் முரப்பியாக தனது வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கின்றார். இப்போது இவரும் தனது முழு வாழ்நாளையும் வாழ்க்கையை அர்ப்பணித்தவரைப் போன்று பணி செய்வார்.

ஆக அந்த அடிப்படையில் மர்ஹூம் வக்ஃப் செய்தது போன்றே பணி செய்தார். மர்ஹூம் நான்கரை ஆண்டுகள் இரயில்வே துறையில் கிளர்க்காக பணியாற்றிய பிறகு 1952 ஆம் ஆண்டு ஜமாஅத்தின் ஊழியராக ஜமாஅத்திற்கு தொண்டாற்ற அன்னார் தன்னை முன்னிலைப்படுத்தினார்கள். இவ்வாறு அன்னாருக்கு ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்தது.

1952 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அன்னார் பைத்துல் மால் துறையில் பணியமர்த்தப்பட்டார்கள். பின்னர் 1954 ஆம் ஆண்டு அல் ஃபஸல் தினசரி அலுவலகத்தில் அன்னாரின் பணிமாற்றம் நிகழ்ந்தது. பின்னர் 1961 ஆம் ஆண்டு தனிச்செயலர் அலுவலகத்தில் எழுத்தராக அன்னாரின் பணிமாற்றம் நிகழ்ந்தது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தின் கடைசி மூன்று ஆண்டுகள் தனிச்செயலர் அலுவலகத்திலும், பின்னர் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்திலும், பிறகு ரப்வாவிலும், பிறகு நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஹிஜ்ரத்திற்குப் பிறகு இங்கும் தனிச்செயலர் அலுவலகம் நிலைநாட்டப்பட்டுள்ளது. இப்போது வரை உள்ளது. எனவே 2014 ஆண்டு வரை அங்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் அவர்களுக்கு கிடைத்தது.

1985 ஆம் ஆண்டு அஸிஸ்டன்ட் பிரெயிவேட் செகரட்டரி பொறுப்பு வழங்கப்பட்டது. மிக அழகிய முறையில் அன்னார் தனது கடமையை செயலாற்றினார்கள். அன்னாருடைய மொத்த சேவைக்கான காலகட்டம் 62 ஆண்டு காலகட்டம் ஆகும். அதில் 53 ஆண்டுகள் தனிச்செயலர் அலுவலகத்தில் பல்வேறு அந்தாஸ்தில் தொண்டாற்றும் நற்பாக்கியம் அவர்களுக்கு கிடைத்தள்ளது. தனது பணியில் மிகவும் வல்லுனராக இருந்தார்கள். மிக முறையாகவும், புத்திசாலித்தனமாகவும் பணியாற்றி வந்தார்கள். அத்துடன் மார்க்க புத்தகங்களை படிப்பதிலும் ஆர்வம் இருந்தது. ஜமாஅத்தின் புத்தகங்களை மிக ஆழமாக படித்து வந்தார்கள். ஷூராவிற்கான ஏற்பாடுகளில் அவர்களுக்கு குறிப்பாக தொண்டு செய்யும் நற்பாக்கியம் கிடைத்துள்ளது. மூன்றாவது கிலாஃபத் காலகட்டத்திலும் அதற்குப் பிறகும் அதற்கான பாக்கியம் அவர்களுக்கு கிடைத்துள்ளது.

தனிச்செயலரின் பொறுப்பில் பல்வேறு பணிகளை செய்வதற்காக அதிலும் குறிப்பாக பொருட்களை வாங்குவதில் மிக நுட்பமான பார்வையுடனும் கடின உழைப்புடனும் செயல்பட்டு ஜமாஅத்தின் செல்வங்களை பாதுகாப்பதில் சிறப்பான கவனம் கொண்டிருந்தார்கள். அந்த கவனத்துடனேயே பொருட்களை வாங்கி வந்தார்கள். பாகிஸ்தான் உருவான பிறகு அவர்களுக்கு காதியானில் தலைமையக பாதுகாப்பு பணிகளை செய்யும் நற்பாக்கியம் கிடைத்தது. அங்கு சிறிது காலம் இருந்தார்கள். அன்னாருக்கு ஐந்து மகள்களும் ஒரு மகனும் இருந்தனர். அன்னாரின் மரணத்திற்கு சில நாட்களுக்கு முன்பாக அன்னாரின் ஒரு மகளும் ஸரீஃப் அஹ்மத் சாஹிப் கமர் முரப்பி அவர்களின் மனைவியும் மரணமடைந்து விட்டார்கள். அன்னாரின் மனைவி லண்டனில் தான் இருக்கின்றார்கள். மூன்று மகள்கள் மற்றும் ஒரு மகன் அதீக் அஹ்மது இங்குதான் பணி செய்கின்றனர்.

தனிச்செயலர் அலுவலகத்தின் ஒரு ஊழியர் முபாரக் சாஹிப் கூறுகின்றார்: 35 ஆண்டுகள் நான் அவர்களுடன் பணி செய்துள்ளேன். ஒரு நீண்ட காலமாக ஷூரா கூட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பான பெரும்பாலான அலுவலக பணிகளை தனியாகவே செய்து வந்தார்கள். மேலும் எங்களுக்கு இவ்வாறு அறிவுரை செய்து வந்தார்கள். உங்களுக்கு எப்போது உலகியல் கஷ்டங்களும், பிரச்சனைகளும் ஏற்பட்டாலும் நீங்கள் துஆவுடன் உங்களது அலுவலக பணிகளில் அதிகம் மூழ்கி விடுங்கள். பின்னர் அல்லாஹ் அந்த கஷ்டங்களை அகற்றி விடுவான். ஊழியர்களிடம் தவறுகள் ஏற்பட்டு விடும்போது மிக அன்புடன் அவர்களுக்கு புரிய வைப்பார்கள். ஏனைய ஊழியர்களும் இதனை குறிப்பிட்டுள்ளார்கள்.

அன்னார் மிக உழைப்புடன் பணி செய்து வந்தார்கள். ஊழியர்களுக்கு வழிகாட்டி வந்தார்கள். அஞ்சுமனின் சட்ட திட்டங்களை அன்னார் நன்கு அறிந்திருந்தார்கள். அன்னாரின் எழுத்தும் மிகச் சிறந்ததாக இருந்தது. மிக அழகிய முறையில் சொற்களை தேர்ந்தெடுத்து வந்தார்கள். புதிய பேனா வாங்கும்போது முதலில் அதனைக் கொண்டு பிஸ்மில்லாஹ் என்று எழுதி வந்தார்கள். பிறகுதான் ஏனைய பணிகளை செய்வார்கள். அலுவலகத்திற்கு வருகின்ற நேரத்தை மிகவும் பேணி வந்தார்கள். ஆனால் நேரம் முடிந்த உடன் அலுவலகத்திலிருந்து திரும்பி விட மாட்டார்கள். மாறாக, பணி முழுமையடைந்து விடும் வரை அலுவலகத்திலேயே இருப்பார்கள். சில முறை இரவு முழுவதும் அமர்ந்திருப்பார்கள். மறுநாள் காலையில்தான் வீட்டிற்குச் செல்வார்கள்.

நான் ரப்வாவில் இருந்தபோது கூட பல்வேறு நேரங்களில் நான் இதனையே கண்டுள்ளேன். கடின உழைப்புடன் அலுவகலத்திற்கு வருவார்கள். மக்ரிப் நேரத்திலும் அலுவலகத்திலிருந்து வருவார்கள். இஷா தொழுகைக்குக்கூட அலுவலகத்திலிருந்தே வருவார்கள். சில நேரத்தில் ஃபஜர் தொழுகைக்கூட அலுவலகத்திலிருந்தே வருவார்கள். மிக கடின உழைப்புடன் பணி செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். அலுவலக நேரம் முடிந்து விட்டது. எனவே வீட்டிற்கு செல்ல வேண்டும் என்று அன்னார் ஒருபோதும் பொருட்படுத்தியதில்லை. ஜமாஅத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்பதே அன்னாரின் அசல் நோக்கமாக இருந்தது.

அன்னாரின் ஒரு சிறப்பம்சம் இதுவாக இருந்தது. அதாவது ஒருபோதும் அன்னார் மற்றவர்களுடைய கடிதத்திலிருந்த விவகாரத்தைப் பற்றி பிறரிடம் விவாதித்தது கிடையாது. அதனை ரகசியமாகவே வைத்து வந்தார்கள்.

அதேபோன்று 1974 ஆம் ஆண்டு நாஸிர் சயீத் சாஹிப் அவர்கள் அன்னாருக்கு எழுதினார்கள்: அதாவது 74 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இஸ்லாமாபாத் பாராளுமன்றத்திற்கு சென்று வந்தார்கள். அப்போது மர்ஹூம் தனிச்செயலர் அலுவலகத்தின் ஊழியராக அங்கு இருந்தார்கள். தனது அலுவலக பணி தவிர்த்து ஏனைய விஷயங்களிலும் பிறருக்கு உதவி செய்து வந்தார்கள். ஊழியருடன் இணைந்து பாத்திரங்களைக் கூட கழுவி இருக்கின்றார்கள்.

சுருக்கமாக தன்னலமற்ற நபராக இருந்தார்கள். அல்லாஹ் அன்னாரிடம் பாவமன்னிப்பு மற்றும் கருணையின் நடைமுறையை காட்டுவானாக. அன்னாரின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அவர்களின் பிள்ளைகளையும், சந்ததிகளையும் அன்னாரின் நன்மைகளில் நிலைநாட்டுவானாக.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

## பிரார்த்தனை

(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அரபி, உருது மற்றும் பாரசீக மொழிகளில் என்பதுக்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார்கள். அவற்றுள் “Essence of Islam” என்னும் ஆங்கில மொழிபெயர்ப்பு தொகுப்பு நூலில் தொகுதி 2 பக்கம் 198–210 –இல் இத்தலைப்பு இடம்பெற்றுள்ளது)

சென்ற இதழின் தொடர்ச்சி...

**பிரார்த்தனை என்றால் என்ன?**

நம் ஆன்மா தன் கையை நீட்டி மகத்தான கீழ்ப்படிதலுடனும், கண்ணீருடனும் அந்தக் கருணையின் தலையாய ஊற்றிடம் எதையோ தேடுகின்றபோது, தன்னை உதவியற்றவனாகக் கண்டு, எங்கிருந்தோ வரும் ஒளியின் பிரதிபலிப்பைத் தேடுகின்ற நிலையும் கூட பிரார்த்தனையின் நிலைதான். எல்லா ஞானங்களும் அத்தகைய பிரார்த்தனையால் அருளப்படுகின்றன. ஒவ்வோர் அறிவின் இருப்பிடத்தின் திறவுகோல் பிரார்த்தனையே ஆகும். எந்த அறிவும், நுண்ணிய ஞானமும் இது அல்லாமல் அருளப்படுவதில்லை.

நமது எண்ணங்கள், சிந்தனையின் பிரதிபலிப்பு, மறைவானவற்றின் மீது நமது தேட்டம் இவை எல்லமே நமது பிரார்த்தனையின் அங்கங்களாகும். ஒரேயொரு வேற்றுமை என்னவென்றால் துஆவில் ஈடுபடும் உள்ளார்ந்த அறிவைக் கொண்டிருப்பவர் அந்த அறிவின் தரத்திற்கேற்ப அதனை செயல்படுத்துகின்றார். அவர்களின் ஆன்மா கருணையின் தலையாய ஊற்றைக் கண்டறிந்து அந்த நுண்ணறிவோடு தன் கரத்தை நீட்டுகிறது. திரையிடப்பட்டவர்களின் பிரார்த்தனை செயலின், சிந்தனையின் காரணத்தை தேடும் முயற்சியே ஆகும்.

வல்லமை மிக்க இறைனிடத்தில் உள்ளார்ந்த நேசம் கொள்ளாதவர், அதனை நம்பாதவர், அவரும் கூட கற்பனையின் மூலம், எண்ணத்தின் மூலம் தேடுகின்றார். ஏதாவது வழியில் மறைவிடத்திலிருந்து வெற்றியின் சமிக்ஞை அவர்களின் உள்ளத்தில் இடப்படும் என்றும் நம்புகிறார். பிரார்த்தனை புரிபவரின் உள்ளார்ந்த அறிவு இறைவன் வெற்றியின் வழியினைத் திறந்து தருவான் என்று நம்புகின்றது. ஆனால் ஆற்றல் மிக்க இறைவனிடம் எத்தொடர்பும் இல்லாத உள்ளம் திரையிடப்பட்வர் அந்த கருணையின் தலையாய ஊற்றை அறிய மாட்டார். அவரும் உள்ளார்ந்த அறிவைப் பெறுபவரைப் போல் வேறோர் இடத்திலிருந்து உதவியைத் தேடுகிறார். அவ்வுதவி கிடைக்கப் பெற்றதும் அதனை வெளிப்படுத்துகிறார். ஆனால் நுட்பமான அறிவைக் கொண்ட ஒரு மனிதன் அந்த தலையூற்றைக் கண்டு கொள்கிறார். ஏனையவர்கள் இருளில் நடப்பவர்களாவர்.

மேலும் உள்ளத்தில் இடப்பட்ட பிரதிபலிப்பும் ஆழிய சிந்தனையும் இறைவனிடமிருள்ளதாகும் என்பதை அறிய மாட்டார்கள். அந்த இறைவன் பதட்ட நிலையில் இருக்கும் ஒருவரின் கவலையை மன்றாடுதலாக மாற்றி ஆழிய சிந்தனையில் இருக்கும் அவரின் உள்ளத்திற்கு தேவையான ஞானத்தை வழங்குகின்றான். அம்மனிதன் தானே அறியாதிருக்கின்ற நிலையிலும், இறைவன் அவ்வடியான் தன்னிடம் மன்றாடிக் கொண்டிருக்கிறான் என்பதை அறிந்து கொண்டு தானே அந்த ஞானத்தின் சிறப்பையும் அதன் புரிதலையும் அவனது உள்ளத்தில் பிரதிபலிப்பாக இறைவன் நுழையச் செய்கின்றான். இறுதியில் அவ்வடியான் வேண்டியது இறைவனால் மீண்டும் அருளப்படுகிறது.

இவ்வகையான ஒளியினைக் காண்பதென்பது, உள்ளத்தின் அகப்பார்வையோடு உண்மையான வழிகாட்டியை உணர்ந்து பின்பற்றப்பட்டால் அதுவே புரிந்து கொள்ளும் ஆற்றல் மிக்க ஒருவரது பிரார்த்தனையாகும். ஆனால் உண்மையான பிரகாசத்தை வழங்குபவனை நோக்கி தன் அகப்பார்வையை செலுத்தாமல் இருந்து கொண்டு, தனக்கு ஓர் அறியாத இடத்திலிருந்து பிரதிபலிப்பும் ஆழிய சிந்தனையும் உருவாக வேண்டும் எனக் கருதினால் அது திரையிடப்பட்ட பிரார்த்தனையாகவே இருக்கும்....

**பிரார்த்தனையும் திட்டமிடுதலும் இரு இயற்கையான தேவைகள்**

திட்டமிடலும், பிரார்த்தனையும் இயற்கை நியதியின்படி தொடர்புடையவை என ஆதாரத்தின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டிருப்பதுபோல், இயற்கையான அத்தாட்சிகளின் அடிப்படையிலும் அது நிரூபணமாகி இருக்கிறது. பொதுவாக துயர வேளைகளில் மனிதனின் இயல்பு திட்டமிடுவதிலும் தீர்வு காண்பதிலும் முனைப்புடன் இருக்கிறது.

அவ்வாறே அவை இயல்பான ஆர்வத்தோடு பிரார்த்தனையின் பக்கமும், ஏழைகளுக்கு தர்மம் கொடுப்பதன் பக்கமும், ஈகை செய்வதன் பக்கமும் ஈர்க்கப்படுகிறது என்பதை எப்போதும் நாம் உணர முடிகிறது. ஆத்மார்த்த வாதம் யாதெனில் மனிதனின் உள்ளார்ந்த சட்டம், ஆரம்ப நிலையிலேயே எல்லா மக்களையும் அவர்கள் பிரார்த்தனை அதன் நோக்கங்களிலிருந்தும் திட்டங்களிலிருந்தும் பிரித்து விடக் கூடாது என்று கட்டளையிடுகிறது. மாறாக அத்திட்டங்களை பிரார்த்தனையின் மூலமாகத்தான் தேட வேண்டும்.

சுருக்கமாக கூறுவதென்றால், பிரார்த்தனையும் திட்டமிடலும் மனிதனின் இயல்பில் இரு இயற்கையான தேவைகளாகும். அவை மனிதன் தோன்றிய காலம் முதல் இரண்டு உண்மையான சகோதரர்கள் போல மனித இயல்பின் சேவகனாகத் திகழ்கின்றன. திட்டமிடல் பிரார்த்தனையின் விளைவாகக் கிட்டுகிறது. மேலும் பிரார்த்தனை திட்டமிடலுக்கு வழிவகுக்கிறது. ஒரு மனிதனின் நல்லதிர்ஷ்டம் இதில்தான் அடங்கியுள்ளது.

அதாவது, திட்டமிடுவதற்கு முன்பாக அவர் தலையாய கருணையின் ஊற்றிடத்தில் இறைஞ்சி பிரார்த்தனையின் மூலம் உதவி தேட வேண்டும். அப்போது என்றென்றும் ஒடிக்கொண்டிருக்கும் நீரூற்றிலிருந்து பிரகாசம் அருளப்பட்டு, நல்ல திட்டங்கள் அவருக்கு கிடைத்துக் கொண்டிருக்கும்.

(அய்யாமே ஸுல்ஹ் ரூஹானி கஸாயீன் தொகுதி 14 பக்கம் 230–232)

எவர் தமது இக்கட்டான துயர நிலையிலும் இறைவன் முன்பு பயபக்தியுடன் குனிந்து தம் கஷ்டங்களுக்காக தீர்வைக் கொண்டு வருவாரோ அவர் வல்லமை மிக்க இறைவனின் திருப்தியையும் உண்மையான அருட்கொடையையும் பெற்றுக் கொள்கிறார். இதற்கான நிபந்தனை யாதெனில் அவர் இறைவனுக்கு சமர்ப்பிக்கும் மன்றாடுதலை அதன் உச்சத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். அவர் தம் பிரார்த்தனையில் நோக்கத்தில் வெற்றி பெறவில்லை என்றாலும் அவருக்கு ஒரு வகையான திருப்தியும் மன அமைதியும் ஆற்றல் மிக்க இறைவனால் அருளப்படுகிறது. அவர் எவ்வகையிலும் ஏமாற்றத்திற்கு உள்ளாக மாட்டார்.

மாறாக, அவரது ஈமான் மேன்மேலும் அதிகரிக்கிறது. அவரது நிச்சய உறுதி மேலும் வலுவடைகிறது. ஆனால் ஒருவன் தனது பிரார்த்தனையின்போது வல்லமை மிக்க இறைவனிடம் முற்றாய் திரும்பவில்லை என்றால் அவன் எப்போதும் குருடனாகவே இருக்கிறான்; குருடனாகவே மரணிக்கிறான்...

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 05 March 2020 Issue No. 10

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

எவர் உளப்பூர்வமாக தமது ஆன்மாவை இறைவன் முன்பு பணியச் செய்து வேண்டுவாரோ அவர் உண்மையில் ஒருபோதும் ஏமாற்றத்திற்குள்ளாக மாட்டார். இத்தகைய முன்னேற்றம் செல்வத்தாலோ, அதிகாரத்தாலோ, சுக போகத்தலோ பெறப்படுவதல்ல. எனினும் அது இறைவனின் கரங்களில் உள்ளது. அதனை அவன் எவ்வாறு விரும்புகின்றானோ அவ்வாறான வகையில் வழங்குகிறான். அது நேர்த்தியான பிரார்த்தனையின் மூலமே கிடைக்கப் பெறுகின்றது.

இறைவனின் நாட்டம் இருக்கும் என்றால், ஓர் உண்மையான நல்லடியான் தம் இன்னல்களுக்கு நடுவே தம் மன்றாடுதலை சமர்ப்பித்து எத்தகைய மகிழ்ச்சியில் ஆழ்ந்து விடுகிறார் என்றால், இந்த மகிழ்ச்சியை ஒரு அரியணையில் அமர்ந்திருக்கும் சக்கரவர்த்தியும் கூட அனுபவித்திருக்க மாட்டார். இதுவே உண்மையான வெற்றியாகும். இது அவர்களுக்கு பிரார்த்தனையின் முடிவில் அருளப்படுகின்றது.

(அய்யாமே ஸுல்ஹ். ரூஹானி கஸாயீன் தொகுதி 14 பக்கம் 237)

**பிரார்த்தனையின் மூலமாக இறைவனின் பார்வை ஈர்க்கப்படுகின்றது**

பிரார்த்தனையின் காரணமாக இறைவனின் கவனம் ஈர்க்கப்பட்டு அதனால் திருப்தியும், மன நிறைவும், வளமும் அருளப்பட்டிருக்கிறது. மேலும் ஆதி காலம் தொட்டு இதுவே ஆன்மீக இறைச் சட்டமாக இருந்திருக்கிறது என்று கூறுவது திருப்தி தரத்தக்க போதுமான ஆதாரம் இல்லையா? நாம் ஒரு நோக்கத்திற்காக முயல்கின்றபோது நாம் தவறிழைக்காமல் இருந்தால், அந்நோக்கத்தை அடைவதில் வெற்றி காண்கின்றோம்.

ஆனால் நாம் இறைவனை வேண்டுவதில் தவறிழைத்தால், ஒரு தகுந்த வழிகாட்டல் இல்லாத குழந்தை தன் தாயிடமிருந்து ஒரு பாம்பை அல்லது எரிகொள்ளியைக் கேட்பது போலக் கேட்டால் வல்லமை மிக்க இறைவன் நமக்கு எது நன்மை பயக்குமோ அதனையே வழங்குகின்றான். இவ்விரு உதாரணங்களிலும் அவன் நம் ஈமானை பாதுகாக்கின்றான்.

எவ்வாறெனில் உண்மையான மன்றாடுதலின் போது ஆற்றல் மிக்க இறைவன் புறமிருந்து முற்கூட்டியே அதனைப் பற்றிய அறிவு வழங்கப்படுகின்றது. அதோடு நாம் இறைவனை கண்டிருக்கிறோம் என்று சொல்லத்தக்க அளவு நிச்சய உறுதி வளர்ச்சியடைகின்றது.

பிரார்த்தனை செய்வதற்கும் அது ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. அத்தொடர்பானது மனிதன் படைக்கப்பட்ட காலம் முதல் நிலைத்திருக்கிறது. ஒரு நோக்கம் நிறைவேற வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றபோது, அவனது வழிமுறை என்னவென்றால், அவனது நம்பிக்கைக்குரிய அடியான் அவனே ஆஜராகி அமைதியற்ற நிலையில், கடும் வேதனையோடும் துயரத்தோடும் தம் முழு நம்பிக்கையையும் கவனத்தையும் அந்நோக்கம் நிறைவேறத்தக்க வேண்டுதல்களாக சமர்ப்பிக்கின்றார்.

அப்போது இந்த அழியக்கூடிய மனிதனின் இறை வணக்கங்கள் விண்ணிலிருந்து தெய்வீக அருளைப் பெறுகிறது. வல்லமை மிக்க இறைவன் புத்தம்புது வழிமுறைகளை உருவாக்குகிறான். அதன் மூலம் அந்நோக்கத்தில் அவருக்கு வெற்றி கிடைக்கிறது.

இப்படிப்பட்ட வேண்டுதல்கள் மனிதனால் சமர்ப்பிக்கப்படுகின்றன என்றாலும் உண்மையில் அம்மனிதன் தன்னை முற்றாக அவ்விறைவனிடம் மாய்த்து விடுகிறான். அந்த மன்றாடுதலின் வேளையில் அவர் அந்த ஏகனும் மகத்துவமிக்கவனுமான இறைவன் முன்னிலையில் தன்னை இழந்தவனாக ஆஜராகும் அப்பொழுதில் அவரது கரம் இறைவனின் கரமாக ஆகி விடுகிறது. அதுவே இறை வணக்கமாகும். அதன் விளைவாக பல்லாயிரம் திரைகளுக்குள் மறைவான இருந்த இறைவன் கண்டுகொள்ளப்படுகிறான். மேன்மைக்குரிய ஏகனான அவ்விறைவனின் இருப்பு அறியப்படுகிறது.

(அய்யாமே ஸுல்ஹ். ரூஹானி கஸாயீன் தொகுதி 14 பக்கம் 238–239)

அறிவற்ற ஒருவன் இறை வணக்கம் வீணானதும் பலனற்றதுமாகும் என்று கருதுகின்றான். ஆனால் பிரார்த்தனையின் காரணமாக அவனைத் தேடுபவர்களுக்கு அந்த கண்ணியத்திற்குரிய இறைவன் அவனையே சான்றாக எடுத்துக்காட்டி அவனது நல்லடியார்களின் உள்ளத்தில் ''நான் எல்லா ஆற்றல்களையும் கொண்டவனாவேன்'' என்ற வெளிப்பாட்டை அருளுகின்றான் என்பதை அவர் அறியவில்லை.

நிச்சய உறுதியின் மீது பசியுள்ள, தாகமுள்ள ஒவ்வொருவரும் இதனை நினைவில் கொள்ள வேண்டும். இவ்வுலகின் இறை ஒளியைத் தேடுபவர்கள் பிரார்த்தனையின் மூலமாகவே அதனை அடைய முடியும். அதுவே எல்லா விதமான சந்தேகங்களையும் அனுமானங்களையும் அகற்றி ஆற்றல் மிக்க இறைவனின் இருப்பைக் குறித்த நிச்சய உறுதியினை வழங்கும் தெய்வீக ஒளியாகும்.

(அய்யாமே ஸுல்ஹ். ரூஹானி கஸாயீன் தொகுதி 14 பக்கம் 239–240)

Source - THE REVIEW OF RELIGIONS, October, 2018.
"PRAYER" p 104-109

தமிழாக்கம்: செய்யது அன்வர் அஹ்மது, தூத்துக்குடி

நேர்மையை நேசிப்போம்
நேர்மையின்மையை வெறுப்போம்

இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது. (முஸ்லிஹ் மவ்வூது)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad